DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **STC 12/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | :Tr.S.பாலு (சிறப்பு உதவி ஆய்வாளர், பணி ஓய்வு) |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 12.05.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 12th **May 2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது திருவேங்கடம் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 24.10.2015 ம் தேதி பணியில் இருந்தபோது 16.00 மணியளவில் கோவில்பட்டி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில் எனது மேலதிகாரியின் உத்தரவுப்படி அரசுமருத்துவமனை சென்று 17.00 மணிக்கு அங்கு சிகிச்சையில் இருந்த நடுவப்பட்டி அய்யப்பன் மகன் நடராஜன் என்பவரை விசாரணை செய்து அவரது புகார் வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். பின்பு அதே நாள் 18.30 மணிக்கு நிலையம் திரும்பி புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப குற்ற எண்.159/2015 ச/பி.294(பி), 341, 323 இதச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவுசெய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல்**

**அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முதல்தகவல் அறிக்கை மற்றும்புகார் வாக்குமூலத்தின் அசலை சமூக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், இதன் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணைக்காக ஒரு நகலை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக உதவிஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நடராஜன் என்பவர் அளித்த வாக்குமூலத்தின்பெயரில் நான்தான் புகார் வாக்குமூலத்தை எழுதினேன். அ.சா.1 புகார் வாக்குமூலத்தை பதிவுசெய்யும்போது அவருடன் மருத்துவமனையில் யார் இருந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**